**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 173 of 2024

DATE : 17.02.2026

Depositions of witness for Prosecution

PW 9

| | | | |
|---|---|---|---|
| Name | செந்தாமரைகண்ணன் | Caste | |
| Father/Husband's Name | வணங்காமுடி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17 th day of February 2026

**(1ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317ன் படி மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திரு. திலிபன் ஆஜர். 2, 3 எதிரிகளுக்காக பிடி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.)**

**முதல் விசாரணை : –**

நான் தற்பொழுது நத்தம்பட்டி காவல் நிலையத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் தனி பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நத்தம்பட்டி காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராக பணியில் இருந்த பொழுது, கார் திருட்டு சம்மந்தமாக அதை கண்டுபிடிப்பதற்காக அன்றைய தினம் காவல் நிலைய பொறுப்பில் இருந்த சார்பு ஆய்வாளர் தனிப்படை ஒன்றினை அமைத்து தேடி வந்த நிலையில், சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த கண்காணிப்பு கேமராவில் உள்ள பதிவுகளை பார்வையிட்ட பொழுது, வழக்கில் திருடப்பட்டதாக சொல்லப்படும் வாகனம்

மதுரையை நோக்கி செல்வதாக கண்காணிப்பு கேமராவில் இருந்த பதிவுகளை பார்வையிட்டு, அதன் தொடர்ச்சியாக பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளை பார்வையிட்ட பொழுது, அந்த நான்கு சக்கர வாகனத்தினை பின் தொடர்ந்து சந்தேகமான முறையில் ஒரு இருசக்கர வாகனம் தொடர்வது தெரியவந்தது.

இறுதியாக அந்த இருசக்கர வாகனமானது சிந்தாமணி சுங்கச் சாவடி அருகே நிறுத்தப்பட்டிருந்தது. சுங்கச்சாவடியில் உள்ள கண்காணிப்பு கேமராவை பார்வையிட்டதில், அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர், திருடப்பட்ட நான்கு சக்கர வாகனத்தில் ஏறி சென்ற விபரம் தெரியவந்தது. மேற்படி இருசக்கர வாகனத்தின் பதிவு சான்றிதழை வைத்து அதன் உரிமையாளரின் முகவரியை தேடினோம். மேற்படி இருசக்கர வாகனத்தினை எடுப்பதற்காக அந்த நபர்கள் அங்கே வரலாம் என்று நாங்கள் அந்த இடத்திலேயே காத்துக் கொண்டிருந்தோம். அதன்படி 08.11.2022 அன்று இரவு, சிந்தாமணி சுங்கச்சாவடியில் நிறுத்தப்பட்டிருந்த இருசக்கர வாகனத்தினை எடுப்பதற்காக சந்தேகமான இரண்டு நபர்கள் வந்திருந்தார்கள். சாட்சி தேதியை தவறுதலாக கூறிவிட்டதாக கூறி 17.11.2022 என்பது தவறு என்றும், 07.11.2022 அன்று புகார் கொடுக்கப்பட்டது என்றும், 08.11.2022 அன்று சிந்தாமணி சுங்கச்சாவடியில் வைத்து சந்தேகமான நபர்களை விசாரணை செய்ததாக சாட்சி திருத்தி கூறுகிறார். அவர்களை பிடித்து விசாரணை செய்த பொழுது நான்கு சக்கர வாகனத்தினை திருடி அதை ஒப்புக்கொண்டார்கள்.

நான்கு சக்கர வாகனத்தினை எங்கே வைத்துள்ளார்கள் என்று விசாரணை செய்த பொழுது அதை சென்னையில் உள்ள வாகன காப்பகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக கூறினார்கள். அதன் பேரில், நானும், சார்பு ஆய்வாளரும், கூடுதலாக இரண்டு காவலர்களும் சென்னை சேப்பாக்கத்துக்கு அருகில் உள்ள வாகன காப்பகத்தில் வாகனம் இருப்பதாக அடையாளம் காட்டியதில், அங்கே சென்று பார்த்ததில் திருடு போன வாகனம் அங்கே

நிறுத்தப்பட்டிருந்தது. அந்த நான்கு சக்கர வாகனத்தினை யாருக்கு விற்பனை செய்தார்கள் என்று விசாரணை செய்த பொழுது, அந்த வாகனத்தை மோகன் பாபு என்பவர் வாங்கிய விவரம் தெரிந்து, அவருக்கு கைபேசி மூலம் போன் செய்து வரவழைத்து விசாரணை செய்ததில், திருடப்பட்ட வாகனம் என்று தெரிந்து குறைந்த விலைக்கு வாங்கியதாக கூறினார்.

பின்னர் சென்னையில் இருந்து நாங்கள் சென்ற வாடகை காரில் டேணி என்ற பால் டேனி, சங்கர் மற்றும் மோகன் பாபு ஆகியோர்களை அழைத்துக் கொண்டும், எனக்கு நான்கு சக்கர வாகனம் ஓட்டத் தெரிந்த காரணத்தினால், திருடப்பட்ட வாகனத்தை சென்னையிலிருந்து நான் தான் ஓட்டி வந்தேன். இது சம்பந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கண்காணிப்பு கேமரா காட்சி பதிவுகளை பார்வையிடும் பொழுது, வழக்கின் எதிரிகள் தான் நான்கு சக்கர வாகனத்தினை திருடியதாக தெரியவில்லை என்று சொன்னால் சரிதான். பின்னர் சிந்தாமணி சுங்கச்சாவடி அருகே வைத்து விசாரணை செய்ததில் வழக்கின் எதிரிகள் திருடிய விபரம் தெரியவந்தது. திருட போன நான்கு சக்கர வாகனத்தின் பதிவு எண் மற்றும் வழக்கின் எதிரிகள் உபயோகம் செய்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண்ணும் எனக்கு தெரியாது என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை. சிந்தாமணி சுங்கச்சாவடியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இருசக்கர வாகனத்தினை எடுப்பதற்கு திரும்ப வருவார்கள் என்று நாங்கள் அங்கேயே காத்திருந்தோம் என்று சொன்னால் சரிதான். சிந்தாமணி சுங்கச்சாவடியில் எவ்வளவு நேரம் காத்திருந்தோம் என்று சொன்னால் அவர்கள் வரும் வரையில் அங்கே தான் காத்திருந்தோம்.

பொதுவாக இருசக்கர வாகனத்தினை அதன் உரிமையாளரோ அல்லது அவருக்கு தெரிந்தவரோ ஓட்டி செல்வது வழக்கம் என்று சொன்னால் சரிதான். சந்தேகத்திற்கிடமாக இருசக்கர வாகனத்தினை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த

காரணத்திற்காக மட்டுமே அவர்களை குற்றவாளி என்று பொதுவாக சொல்ல முடியாது என்று சொன்னால் சரியல்ல. சிந்தாமணி சுங்கச்சாவடியில் எவ்வளவு நேரம் இருந்திருப்போம் என்றால் சுமார் 5 மணி நேரம். கண்காணிப்பு கேமரா பதிவுகளை வைத்து எதிரிகளை அடையாளம் காணவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் சென்னைக்கு சென்றதாக சொல்லி உள்ள நிலையில், என்னுடன் இரண்டு காவலர்களும், சார்பு ஆய்வாளரும் மட்டும் தான் வந்தார்கள் என்று சொன்னால் சரிதான்.

சென்னையில் வைத்து சாட்சிகள் யாரையும் விசாரணை செய்து வாக்கு மூலம் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. அத்தாட்சி எதுவும் தயார் செய்து எதுவும் கைப்பற்றபடவில்லை என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்த வழக்கின் எதிரிகளை அனுமானத்தின் பேரில் தான் கைது செய்துள்ளார்கள் என்றும், உண்மையான குற்றவாளிகளை கைது செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சாட்சியாக எந்த ஆவணத்திலும் கையெழுத்து செய்யவில்லை. இந்த எதிரிகளுக்கும் இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு